DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No. 68/2025**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சதீஸ்குமார் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | தங்கச்சாமி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.02.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.03.2025 ம் தேதி காலை 7 மணியளவில் சார்பு ஆய்வாளர் மற்றும் இரண்டாம் நிலைக்காவலர் வினோத்குமார் ஆகியோர்கள் மது ரோந்து சம்பந்தமாக சென்றோம். எங்களைப் பார்த்ததும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்ததில் அவர் சுகுந்தன் என்றும் அவரிடம் சாக்குப்பையில் 108 மில்லி அளவுள்ள xpress பிராண்டி பாட்டில்கள் 5 இருந்தது. அவரிடம் இருந்த மது பாட்டில்களை சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து

என்னுடையதுதான். (**மேற்படி அத்தாட்சி மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் எதிரியையும் சொத்துக்களையும் காவல் நிலையம் கொண்டுவந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் கைப்பற்றப்பட்ட பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து அழித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி அழித்தல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எங்கள் 3 பேரில் யார் முதலில் சென்று எதிரியை பிடித்தோம் என்றால், நான்தான் பிடித்தேன். எதிரி சாக்குப்பையை இடதுகையில் வைத்திருந்தாரா வலதுகையில் வைத்திருந்தாரா என்றால் சாக்குப்பையை கீழே வைத்திருந்தார், எங்களைப் பார்த்தவுடன் வலது கையில் எடுத்தார். சாக்குப்பை என்ன நிறம் என்றால் வெள்ளை நிறம். சாக்குப் பையை சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் கொடுத்தேன். நாங்கள் பிடித்த xpress பாட்டிலில் என்ன கலரில் லேபிள் இருந்தது என்றால் ஞாபகமில்லை. நாங்கள் குறிப்பிட்டு எந்த இடத்தில் பிடித்தோம் என்று சொல்ல முடியுமா என்றால் எதிரியின் வீட்டு அருகில் பிடித்தோம். எதிரியின் வீட்டு அருகே நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வீட்டு அருகில் உள்ளவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி மது பாட்டில்களை விற்பதை நேரடியாக பார்த்தோமா என்றால் இல்லை. தனிநபர் எவ்வளவு மது பாட்டில்களை வைத்துக் கொள்ளலாம் என்று என் உயர்

அதிகாரியிடம்கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் 180 ml அளவில் 3 பாட்டில்கள் வைத்திருக்கலாம். 3 பாட்டில்கள் என்பது தவறு என்றும் 180 ml அளவுள்ள 12 பாட்டில்களை தனிநபர் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மது பாட்டில்கள் எந்த கடையில் வாங்கப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் அரசு மதுபான கடையில் வாங்கப்பட்டது. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எதிரி மது பாட்டில்கள் விற்கவில்லை என்றும் புள்ளி விபரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No. 68/2025**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | வினோத்குமார் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | வெள்ளி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.02.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 26.03.2025 ம் தேதி நானும் சார்பு ஆய்வாளரும் இரண்டாம் நிலைக்காவலர் சதீஸ்குமார் ஆகியோர் மதுவிலக்கு சம்பந்தமாக வடகீழ்க்குடி பகுதியில் ரோந்து சென்றபோது வடகீழ்க்குடி பஸ் ஸ்டாப் அருகே சுகுந்தன் என்பவர் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்று கொண்டிருந்தார். அவரைப் பிடித்து விசாரிக்க அவர் சாக்குப்பையில் 180 ml அளவுள்ள xpress பிராண்டி பாட்டில்கள் 5 விற்பனைக்காக வைத்திருந்தார். அவரை பிடித்து அவர் வைத்திருந்த மது பாட்டில்களை அத்தாட்சி தயார் செய்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார்.

என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி மகஜரில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். (**மேற்படி அத்தாட்சி மகஜரில் உள்ள 2ம் கையொப்பம் அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் எதிரியையும் சொத்துக்களையும் காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் அத்தாட்சி கைப்பற்றப்பட்ட மது பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து காவல் நிலையம் பின்புறம் அழித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி அழித்தல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எங்கள் 3 பேரில் எதிரியை யார் முதலில் பிடித்தது என்றால் அ.சா.1 பிடித்தார். எதிரி எந்த கையில் சாக்குப்பை வைத்திருந்தார் என்றால் வலதுகையில் வைத்திருந்தார். எதிரி என்ன கலர் சாக்கு வைத்திருந்தார் என்றால் வெள்ளை கலர் சாக்கு வைத்திருந்தார். நாங்கள் எதிரியை வடகீழ்க்குடி பேருந்து நிலையத்தில் பிடிக்கும்போது வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. நாங்கள் எதிரியை பிடிக்கும்போது அவர் வேறு யாருக்கும் விற்பனை செய்து கொண்டிருந்தாரா என்றால் இல்லை. கைப்பற்றியதாக சொல்லும் சாக்கை உயர் அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டோனா என்றால் ஆமாம். கைப்பற்றப்பட்ட பாட்டில்களில் என்ன கலர் லேபிள் இருந்தது என்றால் சிகப்பு கலர். வடக்கீழ்க்குடி பேருந்து நிலையத்திலிருந்து தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்றால், பேருந்தில் வந்தால் ஒரு மணி நேரம் ஆகும். எதிரியை கைது

செய்துவிட்டு காவல் நிலையத்திற்கு எதில் வந்தோம் என்றால் பைக்கில் வந்தோம். நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எதிரி மது பாட்டில்கள் விற்கவில்லை என்றும் எதிரியிடம் இருந்து மது பாட்டில்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் புள்ளி விபரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.